பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஆண்டு சித்திரை 27 ம் நாள் வெள்ளிக்கிழமை [10—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 157

# ஓமந்தை பகுதியில் நேற்றும் சண்டை

## விமானத் தாக்குதலும் விடாது நடந்தது

யாழ்ப்பாணம், மே 10

வவுனியா மாவட்டம் ஓமந்தை மற்றும் விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசுப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றும் கடும் சண்டை நடைபெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இப்பகுதிகளில் நேற்று விடாது விமானத் தாக்குதலும் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

நேற்றைய மோதல்களின் போது ஸ்ரீலங்காப் படைகளுக்கு உதவியாக இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலிக்கொப்டர்கள், இரண்டு அவ்ரோ விமானங்கள் என்பன அகோரத் தாக்குதலை தொடர்ச்சியாக நடத்திய வண்ணம் இருந்தன.

ஓமந்தைக்கு அருகே கைக்ஸ்பான நீர் மின்சார விநியோகத்துக்காக அமைக்கப்பட்டிருக்கும் மின் கோபுர கேபிள்களை அண்டிய பகுதிகளிலும் நேற்றும் கடும் சண்டை நடைபெற்றதாகத் தெரியவருகிறது எனினும் இச்சண்டையினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை.

ஓமந்தைப் பகுதியில் சில கடைகள், வீடுகள் என்பன படையினரால் தீக்கிரையானதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ 15]

## உள்ளூராட்சி சபை தேர்தல் நாளை!

கொழும்பு, மே 10

வடக்கு — கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பதினேழு மாவட்டங்களிலும் நாளை [சனிக்கிழமை] உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

இத்தேர்தல்களை ஒட்டி இந்த மாவட்டங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இராணுவத்தினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாளை நள்ளிரவு அளவில் தேர்தல் முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவுகளை அறிவிப்பதற்காக ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் சேவைகள் நாளை நள்ளிரவுக்குப் பின்னரும் நீடிக்கப்பட்டுள்ளன. [ஒ-5]

## சித்தாண்டியில் பஸ் மீது சூடு! 2 தமிழர் பலி; 4 பேர் காயம்

கொழும்பு, மே 10

மட்டக்களப்பு மாவட்டம், சித்தாண்டிப் பகுதியில், பயணிகள் பஸ் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

அந்த பஸ்ஸில் பயணம் செய்த இரு தமிழர்கள் அப்போது உயிரிழந்தனர். 4 பயணிகள் படுகாயமடைந்தனர்.

கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவரும் இச்செய்தியை ஒப்புக்கொண்டுள்ளார். [ஒ-எ]

## அம்பாறையில் கண்ணி இரு சிப்பாய்கள் பலி!

கொழும்பு, மே 10

அம்பாறை மாவட்டம் யோகமஓயா அருகே விடுதலைப் புலிகள் நடத்திய நிலக்கண்ணி வெடித் தாக்குதல் சம்பவத்தில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். என்று பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் இராணுவ வாகனம் பெரும் சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 7 படையினர் பலி

இதே வேளை வடக்கு—கிழக்குப் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் நடைபெற்ற சண்டைகளில் ஏழு படையினர் கொல்லப்பட்டனர் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது; [ஒ-எ-5]

## வெளி மாணவர்களுக்கு யாழ். இந்து, வேம்படியில் உயர்வகுப்பு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், மே 10

யாழ் மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் இரண்டிலும் உள்ள ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளுக்கு அப்பாடசாலைகளில் உள்ள சாதாரண தர வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதி பெற முடியும்; வேறு பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் இந்த இரு பாடசாலைகளிலும் தற்சமயம் உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற முடியாது.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதற்கான பணிப்புரையை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் உயர் வகுப்புகளுக்கு வெளிப் பாடசாலை மாணவர்கள் அனுமதிக்கப்படுவதே தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஏனைய பாடசாலைகளில் உள்ள — 1990 டிசம்பரில் ஜி. சீ. ஈ. [சாதாரண தர] பரீட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உயர் வகுப்புத் தெரிவுப் பரீட்சை; 17 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மே 10

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் [புதிய ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளில் மாணவர்களை அனுமதிக்கும் தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

கணிதம், தமிழ், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய நான்கு பாடங்களில் பரீட்சைகளை நடத்த — பாடசாலை மட்டத்தில் ஒழுங்குகளைச் செய்யுமாறு — சகல அதிபர்களையும் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வேறு பாடசாலைகளில் கற்றுத் தாம் விரும்பும் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள்,

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



பங்களாதேஷ் நிலைமை ''பட்டகாலிலை படும்'' என்ட மாதிரி எல்லோ கிடக்கு......!

## தொடர்ந்து நடக்கும் குண்டுவீச்சால் வவுனியாப் பகுதியில் உடைமைகள் பெரும் நாசம்!

யாழ்ப்பாணம், மே 10

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வவுனியாப் பகுதியில் நடந்து வரும் தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்களினால் பொதுச் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் பெருமளவில் நாசமாகிவிட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள், கடைகள், பாடசாலைகள் மற்றும் பல கட்டடங்கள் குண்டு வீச்சினால் தகர்ந்து நாசமாகியுள்ளன.

இப்பகுதிகளில் சிக்குண்டபஸ்கள், வான்கள், லொறிகள், டிராக்டர்கள் போன்ற வாகனங்களும் சிதைந்து சின்னாபின்னமாகிக் கிடக்கின்றன.

வீடுகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான [ரூபா பெறுமதியான நெல் மற்றும் தானியங்கள் ஆகியவையும் பல பயிர்களும் அழிந்து போய் விட்டன.

இப்பகுதிகளில் நடந்த குண்டுவீச்சுக்களினால் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள், சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக உத்தேசமாக மதிப்பிடப்படுகிறது. [ஒ]

## வடக்கு, கிழக்கில் பணிபுரியும் பிரெஞ்சு வைத்திய நிபுணர்களை உடன் கொழும்பு திரும்ப பணிப்பு

யாழ்ப்பாணம், மே 10

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பிரெஞ்சு வைத்திய நிபுணர்களை உடனடியாக கொழும்பு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது;

[illegible]ண்டிக்குளத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து விவரமான அறிக்கை தயாரிக்க இந்த அமைப்பின் உயர் அதிகாரிகள் குழுவொன்று இவ்வாரம் கொழும்பு வரவிருக்கிறது.

அந்த குழுவின் கோரிக்கைப் படியே கொழும்பு அதிகாரிகள் இங்கு கடமையாற்றும் வைத்திய நிபுணர்களை கொழும்புக்கு அழைத்துள்ளனர்;

மந்திகை, வவுனியா, மன்னார், மடு, மட்டக்களப்பு, திருகோணமலை வைத்தியசாலைகளிலேயே இவர்கள் கடமை புரிகின்றனர்.

இந்த நிபுணர்கள் கொழும்பில் ஒருவாரம் தங்குவர் என்றும் - இலங்கை அரசின் பதிலில் இருந்தே இவர்கள் இங்கு தொடர்ந்து கடமை[illegible] தெரிய வருகிறது; [இ-3]

## பங்களாதேஷில் மீண்டும் நேற்று சூறாவளித் தாக்கு!

டாக்கா, மே 10

பங்களாதேஷ் நேற்றும் பெரும் சூறாவளித் தாக்குதலுக்கு இலக்கானது.

சிராஜ்கான் மாவட்டத்தை நேற்று நண்பகல் மணித்தியாலத்துக்கு 150 கிலோ மீற்றர் என்ற வேகத்துடன் சூறாவளி தாக்கியது. இப்பகுதியில் பெரும் உயிர், உடைமைச் சேதம் ஏற்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது:

இதற்கிடையில்—

தலைநகர் டாக்காவையும் அதைச் சூழவுள்ள பகுதிகளையும் நேற்று மாலை பெரும் மழையுடன் கூடிய மற்றொரு சூறாவளி தாக்கியது.

இந்தச் சூறாவளி மணிக்கு நூறு கிலோ மீற்றர் என்ற வேகத்தில் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சோயா விதை தேவை; இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அன்னை பாம், இணுவில். [இ-4922]

ஸ்ரீக், கபேட், மரக்கபேட் சோக்கேஸ், கவுண்டர் மேசைகள், சாப்பாட்டு மேசைகள், தையல் மெஷின், றேடியோ, கடைக்குரிய தளபாடங்கள், பனை மரங்கள், வீட்டுக் கதவுகள், யன்னல்கள், காஸ்குக்கர் என்பன விற்பனைக்குண்டு தொடர்பு 07, கைலாசபிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [16781]

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க மாதாந்தம் 5000/- வருமானமுள்ள, 28 வயதுடைய அழகிய மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர் பார்க்கின்றனர். விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்: 40, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். [16754]

## மணமகன் தேவை

யாழ். இந்து 26 வயது வைத்திய கதிகாரிக்கும், 29 வயது M L T க்கும், 30 வயது வழக்கறிஞருக்கும், 25 வயது ஆசிரியைக்கும் செவ்வாய்க் குற்றமுள்ள 28 வயது பாமசிஸ்ட்டுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [16776]

எயர் லங்கா நிறுவனத்தில் வேலை பார்க்கும் CTMA இறுதிப் பரீட்சையை முடிக்க இருக்கும் அழகிய 28 வயது நிரம்பிய நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. குற்றமற்ற சாதகம், சகல விவரங்களுடனும், சாதகக் குறிப்புடனும் விண்ணப்பிக்கவும் இல, 804, C/o உதயன். [4061]

## மணமக்கள் தேவை

யாழ்ப்பாண கத்தோலிக்க இந்து புரட்டஸ்தாந்து மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [16778]

## புத்தகக் கண்காட்சி

கவியோகி சுத்தானந்த பாரதியார் தினம் 11-5-1991 சனிக்கிழமை. நல்லை ஆதீனத்தில். காலை 9 00 மணிக்கு புத்தகக் கண்காட்சி. மாலை 3 00 மணிக்கு சொற்பெருக்கு. அனைவரும் வருக. மூவர்ணப் படம் அன்பளிப்பு மில்க் வைற். [சி-4996]

## முதியோர் சேவை

பண வசதியிருந்தும் தமது அந்திம காலத்தில் பராமரிப்பதற்கு ஆள் உதவியற்ற முதியோருக்கான இல்லம் ஒன்றை நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச்சங்கம் ஆரம்பிக்க உள்ளது. விரும்புவோர் தமது சுய விவரங்களுடன் சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். இல. 74, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [16770]

## மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாண இந்து செவ்வாய்க் குற்றமுள்ள 88வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும் குற்றமற்ற 38 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும் 31 வயது Marketing Executive க்கும் 38 வயது குற்றமுள்ள A/L சித்தியடைந்து திறம்பட வர்த்தகம் செய்பவருக்கும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். [16777]

## அறிவகம்

வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் 374, மணிக்கூட்டு வீதியில் மாணவர்களுக்கான கொப்பிகள், புத்தகங்கள், ஏனைய பாடசாலை உபகரணங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. [சி-4914]

## மணமக்கள் தேவையா

மாற்றுச் சம்பந்தத்தை விரும்பும் சோடி மணமக்கள் பலர் இருக்கிறார்கள்; தனியாக திருமணம் செய்ய விரும்புவோரும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். [16775]


# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane - Jaffna

## 91 A/L PAPER CLASS

(Sat & Sun)

ஆரம்பம்:- 12 - 05 - 1991 ஞாயிறு காலை 10 மணி

PHY. — திரு. வர்ணம்
CHE. — திரு. தில்லை
BOT. — திரு. செல்வநேசன்
ZOO. — திரு. நாகநாதன்
PURE / APPLIED } MATHS — திரு. கிருஸ்ணா

[சி/4923]


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## நாகலிங்கம் சவுந்தரநாயகம்

[இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்]

தோற்றம்: 2 - 6 - 1922  மறைவு: 10 - 5 - 1989

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.

"தர்மவாசா"
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

[16763]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்: 10 — 11 — 1925



ஆண்டவன் திருவடியில்: 10 — 04 — 1991

## திரு. ஆறுமுகம் சின்னத்துரை

[ஓய்வு பெற்ற ஆசிரியர்]

பாசத்தின் ஊற்றே!
பண்பின் சிகரமே!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி மக்கள்

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு

[16755]

"அடியேன் உன் அடைக்கலமே"

# அந்தியேட்டி-வீட்டுக்கிரியை அழைப்பு

தோற்றம்: 1909 — 09 — 07



மறைவு: 1991 — 04 — 12

அமரர்

## இரத்தினம் கதிரவேற்பிள்ளை

அந்தியேட்டி: 1991 - 05 - 10 வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் மடம்.

வீட்டுக்கிரியை: 1991 - 05 - 12 ஞாயிறு நண்பகல் 12-00 மணிக்கு புங்குடுதீவு கமலவாச இல்லம்.

உற்றார், உறவினர், அன்பர்களை மேற்படி நிகழ்ச்சிகளுக்கு வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- நன்றி -

மக்கள், மருமக்கள்.

'கமலவாசம்'
புங்குடுதீவு - 3

[16705]

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்

அன்னையின் மடியில்: 07 — 08 — 1947

ஆண்டவன் அடியில்: 11 — 02 — 1991



அமரர்

## சிங்காரம் சின்னராசா

அவர்கள்

[நெடுங்கேணி, வல்வெட்டி]

பிரான்சிலே பணியாற்றி ஜேர்மனியில் உயிர் துறந்த பெம்பு மிகும் தெய்வமே! பிரிவாலே வாடுகிறோம். பிரிந்து சென்ற தொண்ணூறாம் நாளினது நினைவாகப் பெருகி நிற்கும் கண்ணீரால் அஞ்சலியை செலுத்துகிறோம்.

பேரன்புடையீர்!

11-05-1991 சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு எமது இல்லத்தில் 90 ஆம் நாள் நினைவாக நிகழும் அந்திய அந்திக் கிரியைகளிலும், சபிண்டீகரண நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனித்தனியாக அழைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

இவ்வண்ணம்,

நெடுங்கேணி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள்,
மைத்துனர்-
வ. அப்புத்துரை
கடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

[C/4994]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### விசாரணை ஏன்?

பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் மீது, வவுனியா தாண்டிக்குளத்தில் வைத்து, விமானப்படையினர் தாக்குதல் நடத்தியது குறித்து தனிநபர் விசாரணைக்குழு நியமிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது!

விசாரணைக் குழுக்களை நியமிப்பது என்பது இலங்கை அரசாங்கங்களுக்குப் பழக்கப்பட்ட விடயம் தான். எடுத்ததற்கு எல்லாம் விசாரணைக் குழுக்களை நியமிப்பது, விசாரணையில் காலத்தைக் கடத்துவது, விசாரணைக் குழு தெரிவிக்கும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதில் கால தாமதம் செய்வது என்பன எல்லாம் இலங்கையில் வழமையானவை சர்வ சாதாரணமானவை.

எந்த விவகாரமானாலும் விசாரணைக்குழு நியமிப்பதே பரிகாரம் என்ற குருட்டு நிலைப்பாடும் நிலவுகிறது.

தாண்டிக்குளம் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதன் பிரதான நோக்கம், தொண்டர் நிறுவனங்கள் தொடர்பாக இது போன்ற சம்பவங்கள் இனி நிகழாமல் தடுப்பதே என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது

ஆனால் இவ்வாறான, சம்பவங்களைத் தடுப்பதற்கு விசாரணை தேவையில்லை தொண்டர் நிறுவனங்களின் பணிக்குத் தடங்கலாக, குந்தகமாகப் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல் தடைவிதிக்கலாம். அதற்குரிய வழிமுறைகள், விதிமுறைகளை வகுத்து அதன் பிரகாரம் ஒழுகுமாறு அவர்களுக்கு உத்தரவிடலாம்,

அவ்வாறு செய்வதை விடுத்து, விசாரணைக்குழு நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? ஆபத்திலும், அவலத்திலும் கஷ்டப்படுபவர்களுக்கும் உதவும் தொண்டர் நிறுவனங்கள், போர் நடக்கும் வேளைகளிலும், தமது பணிகளைச் செய்தே ஆக வேண்டிய அவசியமும், அவசரமும் உண்டு. அவற்றின் சேவை அந்த வேளைகளில் தான் அதிஅவசியமாகிறது எனலாம்.

இதனை உணர்ந்து கொண்டு, பாதுகாப்புப் படையினர் எவ்விதத்திலும் தடங்கலாக இருக்காமல் அரசு பார்த்துக் கொண்டால் போதுமானது. வவுனியாச் சம்பவத்தில் குற்றம் செய்தவர்கள் படையினர். அதனை கண்டறிய ஒரு விசாரணைக் குழு தேவையில்லை. படையினரின் குற்றத்தை மூடி மறைக்கவே விசாரணைக் குழு!

பாதுகாப்புப் படையினர் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பலம் இல்லை; பயம் உண்டு. அதே வேளை, தொண்டர் நிறுவனங்கள் பகிஷ்கரிப்பு, வாபஸ் என்று எதையாவது செய்ய முனைந்து விட்டால் கொழும்பின் குட்டு உலகுக்கு அம்பலமாகி விடும். அதனால் கடன்வழங்கு நாடுகள், நிறுவனங்கள் அதிருப்தி அடையலாம். குட்டு அம்பலமாவதையும், அதிருப்தி பரவுவதையும் தடுப்பதற்கான ஒரு சமாளிப்பு நடவடிக்கையே விசாரணைக் குழு!

இதனைச் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க நியாயம் இல்லை. எனவே இலங்கையில் அரசாங்கத்தை மேலாதிக்கம் செய்யும் இராணுவம் உண்டு என்பதையும், மனிதாபிமானத் தொண்டு புரிவதற்கு தடங்கல் உண்டு என்பதையும் உலகம் அறியச் செய்வது அவற்றின் கடமையாகும். அப்போது தான் வெளி உலகம், கொழும்பு மீது அழுத்தங்களையும், நிபந்தனைகளையும் விதித்து அதனை வழிக்குக் கொண்டு வர ஏதுவாகும்.

# ஜனாதிபதித் தேர்தல் வழக்கு;

# முடிவுற ஆண்டுகள் பல செல்லும்?

## தீர்ப்பு வரும்வேளை அடுத்த தேர்தல் முடிந்து விடலாம்

கொழும்பு, மே 10

ஜனாதிபதித் தேர்தலில் ஆர். பிரேமதாஸா வெற்றி பெற்றதை எதிர்த்துத் தாக்கல்செய்யப்பட்டிருக்கு தேர்தல் ஆட்சேபனை வழக்கு முடிவடைய நீண்டகாலம் செல்லும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1988 டிசம்பர் 19ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. பிரேமதாஸா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து இத் தேர்தலில் தோல்வியுற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 1989 ஜனவரி 9 ஆம் திகதி இந்த வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்

திரு ஆர். பிரேமதாஸாவும், தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டி சில்வாவும் இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்குத் தொடர்பாக இரு எதிர்மனுதாரர்கள் சார்பிலும் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை 1989 மார்ச் மாதத்தின் பின் விசாரித்த ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் அந்த ஆட்சேபனையை நிராகரித்து தீர்ப்பு வழங்கியது

பூர்வாங்க ஆட்சேபனை மீதான தீர்ப்பை பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச். தம்பையா, ஜி பி எஸ். டி. சில்வா, மொகமட் ஜமீல், டாக்டர் ரஞ்சித் அமரசிங்க ஆகியோர் 1989 மே 29 ஆம் திகதி வழங்கினர்.

இதனையடுத்து தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான விசாரணையை இதே நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் 1989 ஜூன் 19 ஆம் திகதி ஆரம்பித்தது

### 678 சாட்சிகள்

சடந்த மாத இறுதியில்— நீதிமன்ற விடுமுறைக்கு பின்னர் — விசாரணைகள் மீண்டும் தொடங்கிய சமயம் இவ்வழக்குத் தொடர்பாக 678 சாட்சிகள் சாட்சியமளித்திருந்தார்கள். அவர்களுடைய சாட்சியங்கள் மொத்தம் 16 ஆயிரத்துக்கும் அதிகமான தட்டச்சு செய்யப்பட்ட பக்கங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

சாட்சியமளித்த 678 பேரில் 546 பேர் மனுதாரரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தரப்பினால் அழைக்கப்பட்டவர்கள் எஞ்சியோர் திரு பிரேமதாஸா தரப்பு சட்டத்தரணிகளினால் சாட்சியமளிக்க ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

### இன்னும் 450 சாட்சிகள்

திரு. பிரேமதாஸா தரப்பில் ஆஜராகும் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸி தான் இன்னும் சுமார் 250 பேரை சாட்சியமளிக்க அழைக்க இருப்பதாகக் கூறியுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் சார்பில் ஆஜராகும் — அரச தரப்புச் சட்டத்தரணியான — செலிஸிட்டர் ஜெனரல் திலக் மாரப்பன தானும் சுமார் இருநூறு சாட்சிகள் வரை அழைக்க இருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதனால் வழக்கு விசாரணை மிக நீண்டகாலம் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில்—

வழக்கு விசாரணை ஆரம்பித்த பின்னர்— 1989 நவம்பரில் நீதியரசர் ரஞ்சித் அமரசிங்க சுகவீனமுற்று நீதிமன்றுக்கு சமுகம் தரமுடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து அவரது இடத்துக்கு நீதியரசர் பத்மநாதன் இராமநாதன் நியமிக்கப்பட்டார்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி மற்றொரு நீதியரசரான ஜமீல் தமது 65 ஆவது வயதில் ஓய்வு பெற்றதை அடுத்து இந்த வழக்கை விசாரிப்பதற்கு அவரது இடத்துக்கு நீதியரசர் விடான்லி குணவர்த்தனா நியமிக்கப்பட்டார்

இதேசமயம்—

இந்த வழக்கை விசாரித்து வரும் பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க எதிர்வரும் ஆகஸ்ட் 20 ஆம் திகதியும்— நீதியரசர் தம்பையா அக்டோபர் 14 ஆம் திகதியும்— தமது 65 ஆவது வயதில் —இந்த வழக்கின் விசாரணைக்கு இடை நடுவில் ஓய்வு பெற இருக்கிறார்கள்

அவர்களது இடங்களுக்கு புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட்டாலும் கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட சாட்சியங்களை—சுமார் 16 ஆயிரம் பக்கங்களிலும் கூடிய பதிவுகளை—புதியவர்கள் வாசித்து அவற்றை கைக்கொண்டு மேலும் விசாரணை நடத்தித் தீர்ப்பளிப்பது என்பது நீண்ட காலத்தை எடுக்கும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. [உ]

## வாழைநார் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், மே 10

வாழைநார் அலங்காரப் பொருள்கள் கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நல்லூர் முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்

காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை கண்காட்சி திறந்திருக்கும்.

உள்ளூராட்சி ஆணையாளர் திரு சு. டிவகலாலா கண்காட்சியைத் திறந்து வைப்பார்

கண்காட்சியில் இடம் பெறும் தரமான பொருள்களுக்கான பரிசுகளை உதயன் நிறுவனத்தினர் வழங்குகிறார்கள். [இ]

# தொண்டு செய்யும் டாக்டர்கள்

# காயமடைவது கவலைக்குரியதே

## பிரெஞ்சு வைத்தியக் குழுவின் தலைவர் தகவல்

"எம். எஸ் எவ்.', என்ற பிரெஞ்சு வைத்தியத் தொண்டர் குழுமீது இம்மாதம் மூன்றாம் திகதி வவுனியா தாண்டிக் குளத்தில் வைத்து விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும் —

இது சம்பந்தமாகக் கொழும்பில் உள்ள தொண்டர் நிறுவனங்கள் ஜனாதிபதியிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்ததும் —

விமானத் தாக்குதல் சம்பவம் குறித்து தனிநபர் விசாரணைக் குழு நியமிக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதும் தெரிந்தவையே.

எம். எஸ். எவ். குழு குறித்த சில பின்னணித் தகவல்களை இங்கே படிக்கலாம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வைத்திய சேவைகளை வழங்கிவரும் எம். எஸ். எவ். தொண்டர் நிறுவனத்தின் தலைமையகம் பிரெஞ்சு தலைநகர் பாரிஸில் இயங்குகின்றது.

எம் எஸ் எவ் என்பது Medecins Sans Frontieres என்று அழைக்கப்படுகிறது. "எல்லைக் கட்டுப்பாடு இல்லாத டாக்டர்கள்' என்பதே இதன் தமிழ் கர்த்தம் ஆகும்.

உலகின் மிகப்பெரிய அவசர வைத்திய உதவிகளை வழங்கும் வைத்திய தொண்டர் நிறுவனம் இது என்று அறிவிக்கப்படுகிறது.

உலகில் அழிவுகள் மற்றும் வன்செயல்களால் கஷ்டப்படும் மக்களுக்காக, அவர்கள் வாழும் நாடுகளுக்கு தனது வைத்தியத் தொண்டர்களை இந்த நிறுவனம் அனுப்பி உதவி புரிகிறது.

இதன்கீழ் இலங்கையின் வடக்கு—கிழக்கு மாகாணத்திலும் எம் எஸ் எவ் குழு பசேவை புரிந்து வருகிறது.

எம். எஸ். எவ் நிறுவனத்தின் தலைவராக டாக்டர் ரொனி பிரோமன் [Rony Brauman] பணி புரிகின்றனர்.

அவர் 'நியூஸ்வீக்' சஞ்சிகைக்கு அண்மையில் அளித்த பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: உங்கள் வைத்தியர் குழுவைச் சேர்ந்தவர்கள் அசம்பாவிதங்களில் சிக்கி காயமடைவது அல்லது கொல்லப்படுவது குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

பதில்: ஆம். நிச்சயமாக. நாம் கொமாண்டோக்கள் அல்ல. ... பட்டுள்ளார்கள்; நானே பல தடவை துப்பாக்கிச் சண்டைக்கு நடுவிலும் மறைந்திருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களிலும் சிக்கியுள்ளேன். நாம் ஓரளவு ஆபத்துகளுடனும் பணிபுரிய தயாராக இருக்கின்றோம். ஆனால் அதற்கும் ஓர் எல்லை உண்டு

கேள்வி: படையினராகிய நோயாளிகளுக்கும் நீங்கள் சிகிச்சை அளிப்பீர்களா?

பதில்: பிரச்சினை ஏதும் இன்றி நாம் அதைச் செய்வோம். மற்ற நாடுகளில் இதனைச்செய்து வருகிறோம். பொதுமக்களின் நலன்களைப் பேணுவதே எமது இலட்சியம். ஆனால் யாரும் காயமடைந்தால், அவரைப் பார்த்து "சீருடை அணிந்திருக்கிறீர்களா ? உங்களது அரசியல் கருத்துக்கள் யாவை"— என்று கேட்க மாட்டோம். அவருக்கு சிகிச்சை அளிப்பதில் மட்டுமே ஈடுபடுவோம். நீங்களும் இந் நிலையிலிருந்தால் அப்படித்தான் செய்வீர்கள்.

கேள்வி: பெண்கள் மற்றும் குழந்தைகளை பிரதான இலக்காக வைத்து தான் நீங்கள் உதவுகிறீர்களா?

பதில்: ஆம்; எமது 'வைத்திய அசாதி' பெண்டிப் பெண்களையும், குழந்தைகளையும் சனத்தொகை இலக்குகளாகக் [Target Population] கருதுகிறோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகச் செய்திகள்

### மரங்களில் கட்டுண்டு சடலங்கள்!

டாக்கா, மே 10

பங்களாதேஷில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மரங்களோடு கட்டப்பட்ட நிலையில் பல குழந்தைகளின் சடலங்களை மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் நேற்று கண்டுபிடித்தனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வீசிய சூறாவளியின் போதே வெள்ளத்தில் தங்கள் குழந்தைகள் அள்ளுண்டு போகாமல் இருக்க அவர்களை மரங்களுடன் பெற்றோர் கட்டிவைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-எ]

### சி. ஐ ஏ. தலைவர் இராஜினாமா!

வாஷிங்டன், மே 10

அமெரிக்க மத்திய உளவு நிறுவனத்தின் [சி. ஐ ஏ.] தலைவர் வில்லியம் வெப்ஸ்டர் நேற்று இராஜினாமாச் செய்தார்.

அவரது ராஜினாமா தமக்கு ஆச்சரியத்தைத் தந்ததாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

சி ஐ ஏ நிறுவன தலைவராக திரு. புஷ் 1960களில் பணி ஆற்றி இருந்தார்

[இ-எ]

### அமெரிக்க விமானத்தை நோக்கிச் சூடு

பக்தாத் மே 10

ஈராக்கின் வட பகுதியில் குர்டிஷ் பிரதேசம் மீது பறந்து சென்ற அமெரிக்க போர் விமானம் ஒன்றின் மீது ஜனாதிபதி சதாம் படையினர் சுட்டனர். விமானத்துக்குச் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

[இ-எ]

### வேலை நிறுத்தம் இன்று முடிவு

ரஷ்யா. மே 10

சோவியத்யூனியனில் கடந்த இரண்டு மாதங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் சுரங்கத் தொழிலாளர்கள் இன்று வெள்ளி காலையுடன் தமது வேலை நிறுத்தத்தை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளனர்.

நிலக்கரி சுரங்கங்கள்மீதான சோவியத் அரசின் கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, இம்முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-த]

### அவசரகால சட்டம் மேலும் 3 வருடம் நீடிப்பு

மேலும் மூன்று ஆண்டு காலத்திற்கு அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது என்று எகிப்திய நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த நீடிப்பு அடுத்த மாதம் முதலாம்திகதி முதல் அமுலுக்கு வருகிறது. 31 - 5 - 1994 வரை நீடிப்பு நடைமுறையில் இருக்கும்.

1981 இல் அப்போது ஜனாதிபதியாக இருந்த அன்வர் சதாத் கொலைப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

### குண்டு வெடிப்பு

பாகிஸ்தான் - ராவல்பிண்டி நகரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரண்டு குழந்தைகள் உட்பட ஒன்பதுபேர் மரணமானார்கள். 23 பேர் படுகாயமடைந்தனர். [இ எ]

# உணவு முத்திரைப் பொருள் இன்று கடைசி நாள்

யாழ்ப்பாணம், மே 10

யாழ். மாவட்டத்தில் ஜனவரி மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகளுக்கான பொருள்களின் விநியோகம் இன்றுடன் முடிவடைகின்றது.

50 சத வீதமான மாணவர்கள் இப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளாததால் கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட இருந்த இவ்விநியோகம் இம்மாதம் 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை பெப்ரவரி மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகள் உதவி அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அவற்றைப் பெற்று மாணவர்களுக்கு வழங்க பாடசாலை அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக சேவைப்பகுதி கோரியுள்ளது. [இ-த-3]

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

கொழும்பு, மே 10

இந்த ஆண்டுக்கான ஐந்தாம் வருட புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்படவிருக்கிறது.

இப்படி பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.


## கம்பியூட்டர் வகுப்புகள்

15 - 5 - .991 முதல் கம்பியூட்டர் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

விண்ணப்பங்களுக்கு நேரில் வரவும்.

**வினைல்ஸ் கல்வி நிலையம்,**
சுன்னாகம் [16767]



## G. C. E. (A/L) - PHYSICS
**Paper Class For 91 Batch**

1. நாகலிங்கம் கல்வி நிலையம்
திருநெல்வேலி [சனி, ஞாயிறு 10 00.a m.]
2. பிரத்தியேக வகுப்பு
சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய்.
[செவ்வாய், வியாழன் 6.30 .a .m]

TUTOR: N பத்மநாதன் B.Sc., (Hons) [4058]


## 31 ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இராமநாதன் சிவபாக்கியம்

தோற்றம்: 14. 10. 1926 மறைவு: 10. 04. 91

எங்கள் குடும்ப விளக்காக இருந்து வழிகாட்டிய அன்னை திருமதி சிவபாக்கியம் சிவ பேறெய்திய 31ஆம் நாள் இன்றாகும். இன்று புலோலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மகேசுவர பூசையில் பங்கு பற்றி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்க வருமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1 ஆம் கட்டை, புலோலி

கணவன் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/4997)

# உளரீதியாக பாதிக்கப்பட்டோர் குறித்து ஆய்வு நடத்த முடிவு

## கருத்தரங்கில் தகவல்

யாழ்ப்பாணம், மே 10

தற்போதைய இராணுவ நடவடிக்கையால் உளரீதியாகப் பாதிக்கப்பட்டோர் தொடர்பாக ஓர் ஆய்வு நடத்தப்பட உள்ளது. உளரீதியாகப் பாதிக்கப்பட்டோர் இனம் காணப்பட்டு அவர்களுக்கு ஆலோசனைகளும், சிகிச்சையும் அளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தகவல்களை யாழ் மருத்துவபீட உளவளத்துறை விரிவுரையாளரும், யாழ். போதனா வைத்திய சாலை உளவியல் மருத்துவருமான டாக்டர் ஜே. சோமசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த 8 ஆம் திகதி உளவியல் பாதிப்புச் சம்பந்தமான ஆய்வுக் கருத்தரங்கு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தலைமையில், அவரது பணிமனையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

கருத்தரங்கில் மற்றும் சுகாதாரக்கல்வி அதிகாரிகள் வைத்திய அதிகாரிகள். மாநகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தமது தலைமை உரையில்,-

யுத்த நிலையால், குழந்தைகள் பாடசாலைப் பிள்ளைகள், இளைஞர்கள் முதியோர் ஆகிய அனைத்து பிரிவினரும் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உளவள ஆய்வின் மூலம் ஏழைமையை அறிந்து அதற்கு நிதிப பாதிப்புக்குள்ளானோருக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில்,-

யுத்த நிலையால் பலரும் அதிர்ச்சியும், மனக்கிலேசமும் அடைந்துள்ளனர்.

இதனால் சாதாரண குடும்ப, சமூக வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத் துணை மூலமும், சாந்த வழி முறைகள் மூலமும் ஆலோசனைகள் வழங்கி உதவலாம் என்றார். [இ-18]

## சாவகச்சேரி சந்தையில் சைக்கிள் திருட்டு

தென்மராட்சி, மே 10

சாவகச்சேரிச் சந்தையில் அடிக்கடி சைக்கிள் திருட்டுகள் இடம் பெறுகின்றன. கடந்த 2 ஆம் திகதி ஒரு சைக்கிளும் 3 ஆம் திகதி மற்றும் ஒரு சைக்கிளும் மீன்சந்தைக்கு முன்னால் களவுபோய் இருப்பதாக விடுதலைப் புலிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. [இ-117]

## சேவைக் காலப் பயிற்சி

வடமராட்சிக் கோட்டப் பிரிவிலுள்ள, நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய கொத்தணிகளிலுள்ள ஆரம்ப பிரிவுகளிலே கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 19 ஆம், 20 ஆம், 21 ஆம், 25 ஆம், 26 ஆம் திகதிகளில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் சேவைக் காலப்பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விண்ணப்பித்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ-118]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முறைசாராக் கல்விப் பிரிவினரால் யாழ் நகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள உபவள நிலையத்தில் கல்வி அபிவிருத்தி திட்டமிடல், வாழ்க்கைத் திறன் கல்வி, சுய தொழில் ஆலோசனைகள் மற்றும் உள்ளூர் உற்பத்தி போன்ற விடயங்களுக்கான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன

15 ஆம் திகதி வரை இக்கலந்துரையாடல் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## பாப்பா பாட்டு கவிதை நூல்

யாழ்ப்பாணம், மே 10

கல்வி அதிகாரி திரு. த. துரைசிங்கம் எழுதிய 'பாப்பா பாட்டு' கவிதை நூல் கடந்த திங்கட்கிழமை காலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ் கோட்டப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. இராசரத்தினம் இந்நூலை வெளியிட்டு வைத்தார்.

... பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். [இ]

## பாலர் பாடசாலை படிப்பகம் திறந்து வைப்பு

சாவகச்சேரி, மே 10

திருமலை அகதிகள் குடியிருப்பான லெப். கேர்ணல் பொன்னம்மான் குடியேற்றத்தில் கப்டன் தியன் [திருமலை] பெயரில் பாலர் பாடசாலையும், கப்டன் திருச்செல்வம் [திருமலை] பெயரில் பாலர் படிப்பகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டன.

திருமலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுசனத் தொடர்பு பொறுப்பாளர் திரு ரவி, சாவகச்சேரி வட்டப்பொறுப்பாளர் திரு. ஜெயா ஆகியோர் இவற்றைத் திறந்து வைத்தனர்.

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதர் பரமலிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அரியாலையில் வசித்தவரும், பிரபல வர்த்தகருமான S. R பரமலிங்கம் காலமானார் இவர் காலஞ்சென்ற சற்குணத்தின் அன்புக் கணவரும், சரஸ்வதி, சண்முகநாதன், இராசம்மா, திருச்செல்வம், நிரஞ்சனாதேவி ஆகியோரின் தந்தையாரும், கந்தசாமி, விக்னேஸ்வரன், காலஞ்சென்ற கணேஸ், புனிதமலர், கண்மணி ஆகியோரின் மாமனாரும், தையல் அம்மை, சிவக்கொழுந்து, சின்னத்துரை, கனகசபை, முத்தையா, விசாலாட்சி, கோபால பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10 - 05 - 1991 மாலை 4 00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: பூ. விக்கினேஸ்வரன்

77/8 A. V றோட், அரியாலை. [16779]

## திருமதி நல்லதம்பி பொன்னம்மா

புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நல்லதம்பி பொன்னம்மா 9-5-91 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், சிந்தாமணியின் அன்புத் தாயாரும், கனகலிங்கத்தின் அன்பு மாமியாரும், திருமதி பங்கையர்ச்செல்வி பத்மநாதன், திரு. சுலேந்திரன் லலிதா, திரு கமலேந்திரன் கிருஸ்ணகுமாரி, திருமதி மகாலட்சுமி தருமநாதன், திருமதி சோதிமலர் மயில்வாகனம், சிவனேந்திரன், கீதாஞ்சலி, சுமந்திரன் ஆகியோரின் பேத்தியும், திவாஜினி, பத்மஜினி, கார்த்திகா, லக்ஷனா, கௌதமி, கமலகரன், கமலரூபா, தினேஸ், றொமேஸ், ஜெனீவன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [10-5-91] வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மணற்காடு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: திருமதி பத்மநாதன்

தாளையடி லேன், திருநெல்வேலி. [16707]

## சபாபதிப்பிள்ளை இராமலிங்கம்

[சமாதான நீதவான் - இளைப்பாறிய ஆசிரியர்]

தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு சபாபதிப்பிள்ளை இராமலிங்கம் [சமாதான நீதவான் - இளைப்பாறிய ஆசிரியர்] அவர்கள் 9 - 5 - 91 இல் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் சிவகாமிதேவியின் அன்புக் கணவரும், பா. சந்தரேஸ்வரியின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 10 5-91 காலை 10 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல் மனைவி, மகள்

தொல்புரம். [16709]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த ஆண்டு 9, 10, O/L, A/L மாணவர்களுக்கு சலுகை அடிப்படையிலான வகுப்புக்கள் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

**ஆரம்பம்: 11 - 05 - 1991**

சனி மாலை 3 மணி

| | |
|---|---|
| கணிதம் / விஞ்ஞானம் | திரு. கதிர், V. குமரன் |
| வர்த்தகம் | திரு. S. மகேந்திரன் |
| தமிழ் | திரு M. J. சர்மா |
| சமூகக்கல்வி | திரு. கோபி |

ஏனைய பாடங்களும் ஆரம்பமாகின்றன.

முக்கிய குறிப்பு:

★ தீவகத்தில் V. T. C., S. H. அக்கடமி, பிறைற்றன் கல்வி நிலையங்களில் பயின்ற மாணவர்கள் இங்கு தமது கல்வியைத் தொடரலாம்.

★ A/L வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:-

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[இ-4982]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 - 06 - 1934

மறைவு: 01 - 05 - 1989

திதி: 10 - 05 - 1991

**உயர்திரு. வை. மு. பஞ்சலிங்கம்**
அவர்கள்
[யாழ். மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும், 1984 - 1989]

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள்,
உறவினர்கள்.

நவாலி றோட்,
ஆனைக்கோட்டை

[16769]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 26 — 06 — 1954



மறைவு: 10 — 04 — 1991

அமரர்

**மேதினிகுமாரி பரமநாதன்**
[தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்]

"மேதினி" நீ மேதினியில் மேன்மையுற்றாய்
யாதும் நீ சொல்லாது விண்ணிற்கு ஏகிவிட்டாய்
தீது அறியா நீ ஏன் துன்பத்தி தீயில்
எமை இன்று வருந்த வைத்தாய் - அன்பு
சுமை ஏந்திய எங்கள் சகோதரி, என்றும்
உனை எண்ணும் பாச நெஞ்சங்கள்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

[16780]

## காரைநகர் மாணவருக்கான உணவு முத்திரை

யாழ்ப்பாணம், மே 10

காரைநகர் மாணவருக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய உணவுமுத்திரை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 முதல் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் வைத்து பாடசாலை அதிபர்களினால் வழங்கப்படும்.

மாணவர்கள் வந்து அதனை பெற்றுச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். [ஜீ-ஏ]

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், மே 10

கொக்குவில் நந்தாவில் சற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

காலை 8 00 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும். [த]

## 27 தொண்டர் இரத்த தானம்

சர்வதேச செஞ்சிலுவைச் செம்பறைச் சங்க தினமான கடந்த புதன்கிழமை செஞ்சிலுவைத் தொண்டர்கள் 27 பேர் இரத்த தானம் செய்தனர்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட தொண்டர்களும், நிர்வாகிகளும் இரத்த தானம் செய்ய முன்வந்த போதிலும் இரத்த வங்கி வசதிகளை முன்னிட்டு 27 பேரிடம் இருந்து மட்டுமே இரத்தம் பெறப்பட்டது.

மிகுதியானோரிடம் தேவைப்படும் நேரங்களில் இரத்தம் பெறப்படும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-15]

## ரியூப் விலை ரூ. 45 ஒட்டும் கூலி ரூ. 25

சைக்கிள் ரியூப்பின் விலை ரூபா 45. ஆனால் அதனை "வல்கனைஸ்" செய்யக் கூலியாக ரூபா 25 கொடுக்க வேண்டியுள்ளது.

தற்போது பாவனையில் உள்ள சைக்கிள் ரியூப்புகள் தரம் குறைந்தவையாக இருப்பதால் சில சமயம் பொருத்தினுடாக காற்றுப்போய் விடுகிறது.

இப்படியான ரியூப்புகளை "வல்கனைஸ்" செய்யவே இவ்வளவு பெரிய தொகை அறவிடப்படுகிறது என்று கூறப்படுகிறது. [இ-69]

## சுத்தானந்த பாரதியார் நினைவு தினம்

மகரிஷி சுத்தானந்த பாரதியார் நினைவு தினம் ஆகும். இதனையொட்டி நல்லை ஆதீனத்தில் நாளை சனிக்கிழமை காலை புத்தகக் கண்காட்சியும் மாலை 3 00 மணிக்கு சொற்பொழிவும் இடம் பெறும். [இ-த]

**Personal**
**New Science Centre**
Elilakam Front Lane,
Jaffna.

**91 A/L Paper Classes**

| | |
|---|---|
| ZOO. | - 6-30 a.m. |
| PHY. | - 7 30 a.m. |
| CHE. | - 8-30 a.m. |
| BOT. | - 9-30 |
| APP/PURE | [illegible] |

[இ-4913]

# கலை, வர்த்தகக் கல்லூரி

**C. C. A.**

[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
யாழ்ப்பாணம்

**G. C. E. A/L 92**

பிரிவு 2

**ஆரம்பம்: 11 - 05 - 1991**

சனிக்கிழமை காலை 8-00 மணி [4925]

# அன்பான வேண்டுகோள்

எங்கள் அன்பு மகள்

**செல்வி சாந்தினி (கண்ணா)**


அம்மா நோயாளி, நான் இளைப்பாற உள்ளேன் உமது பிரிவால் நானும், அம்மாவும் சகோதரிகளும், அம்மம்மாவும் சோகமுற்றிருக்கின்றோம். மேற்கொள்ள இருந்த சமயக் கடமையை விட்டு உடனடியாக எம்மிடம் திரும்பி வரும்படி இரந்து கேட்கின்றோம். தவறுவீரேயானால் உமது அவசர முடிவினால் நீரே பின்பு வருந்த வேண்டிவரும் பப்பாவை நீர் நன்கு அறிவீர்.

அன்புள்ள:

பப்பா, அம்மா, ஐடா அக்கா,
பவா அக்கா, அம்மம்மா

[16785]

# 75 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் ராசு சுமேந்திரன்**
[வள்ளுவன்]
(Grobherog - Friendkhsk 78, 6600 Saarbrucken, W. Germany)

மண்ணில்: 14 06 - 1962

விண்ணில்: 24 - 02 1991

"எங்கள் குலவிளக்கே சுமேந்திரா குன்றாத
மாமணியாய் அருந்தவப் புதல்வனாய் வந்துதித்தாய்
எங்கள் துயர்துடைக்க தாய் நாட்டை விட்டகன்றாய்
வாய்மையில் வள்ளுவன் போல் வருவாயன்றோ
உன்னை வள்ளுவா என்றோம்
நின் கள்ளமற்ற மனதைக் கண்டோ காலன்
உன்னைக் கவர்ந்து விட்டான்"

களங்கமற்ற புன்முறுவல் தவழும் முகத்தைக்
காணமுடியாது தவிக்கும்;

மனைவி, பிள்ளைகள், (ஜேர்மனி),
பெற்றோர் (கொழும்புத்துறை)
சகோதரர்கள் (பிரான்ஸ், இந்தோனேசியா),
மாமன், மாமி, மைத்துனர்,
மைத்துனிகள் (மீசாலை),
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்,

திதி; 10 - 05 - 1991 வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[16704]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் உணவு நிவாரண விநியோகம்; இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், மே 10

உலர் உணவு நிவாரணம் வழங்குவதில் இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று மேலதிக அரசாங்க அதிபர் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்காத காரணத்தால், தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு முதலிடமும் — இராணுவ நடவடிக்கைகளால் நிரந்தரமாகத் தொழில் இழந்திருப்போருக்கு இரண்டாவது இடமும் கொடுத்து நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவேண்டும் என்று உதவி அரச அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

உலர் உணவு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான புதிய ஏற்பாடுகள் வருமாறு:-

★ இடம்பெயர்ந்து வாழ்கின்ற 1500 ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறுகின்ற — சகல குடும்பங்களுக்கும் [''இ'' அட்டை வைத்திருப்போர்] மூன்று வார இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும். இது இம்மாதத்தின் முதலாம், 10 ஆம், 20 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இந்த மூன்று நிவாரணக் கட்டங்களும் 37 ஆவது கட்டத்தினையும் அதனைத் தொடர்ந்த 2 கட்டங்களையும் உள்ளடக்கும். இதற்காக உலர் உணவு நிவாரண அட்டையில் எல்லோருக்குமான 37 ஆம் கட்டமும், அதன் பின்னர் பழைய முறைப்படி 8 ஆம், 9 ஆம் புள்ளிகளும் இரத்துச் செய்யப்படல் வேண்டும் இது முகாம்களில் உள்ளவர்களுக்கும் பொருந்தும்.

★ ''இ'' அட்டையையுடைய தொழிலிழந்தவர்களும் ''உ'' அட்டையையுடைய 1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களும் 38 ஆம் கட்ட இலவச உலர் உணவு நிவாரணத்தைத் தொடர்ந்து 37 ஆம் கட்ட இலவச உலர் உணவு பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள்.

★ உலர் உணவு விநியோகத்தினை தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான உணவுப் பொருள் கையிருப்பு எவ்வாறு ப.நோ.கூ. சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பொருள்கள் பற்றாக்குறை ஏற்படின் நிதி இருப்புடன் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன.

★ வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையை உதவி அரசாங்க அதிபர்கள் உறுதிப்படுத்திய பின்னரே அவர்களுக்கான தொடர் நிவாரணங்கள் வழங்கப்படல் வேண்டும்.

★ யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து முன்பு இடம்பெயர்ந்து சென்று, பின் மீளக்குடியேறியிருக்கும் மக்களிடமுள்ள ''இ'' அட்டைகள் யாவும் ''உ'' அட்டைகளாக மாற்றப்பட்டு, அதற்கேற்றவாறு நிவாரணங்கள் வழங்கப்படும். [அ 5]

# உணவுப் பொருள்கள் இன்றி அனலைதீவு மக்கள் பாதிப்பு

## குழந்தைகள் பசியால் வாட்டம்

அனலைதீவு, மே 10

நீண்ட நாட்களாக அனலைதீவுக்கு எதுவித உணவுப் பொருள்களும் அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடைகளில் அரிசி, மா, சீனி, குழந்தைகளுக்கான பால்மா வகைகள் முற்றாகத் தீர்ந்துவிட்டன; எதையும் வாங்க முடியாத நிலை.

அதனால் இப்பகுதி மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர். குறிப்பாக பச்சிளம் குழந்தைகள், பால் மா இன்றி பசியால் வாடுகின்றன.

போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால், நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு அரச அதிகாரிகளோ அல்லது செஞ்சிலுவைச் சங்கம் போன்ற உதவி வழங்கும் நிறுவனங்களோ உடனடியாக உணவுப் பொருள்களை அனுப்பி இம்மக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஓ-18]

## தாக்குதல் சம்பவங்கள்:

# வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நாளை பிரேமதாசவை சந்திப்பர்

யாழ்ப்பாணம், மே 10

வடக்கில் பணி புரியும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஸ்ரீலங்காப் படையினரின் தாக்குதல்களுக்கு இலக்கான சம்பவங்கள் குறித்து அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் மீண்டும் நாளை சனியன்று ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கின்றனர் கொழும்புச் செய்தி ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே ஒரு தடவை தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்திருந்தனர் என்பதும்— அப்போது அவர்களால் விடுக்கப்பட்ட இலகோரிக்கைகளுக்கு இதுவரை பதில் ஏதும் தரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-5]

# தேர்தல் முறைப்பாடுகள்: தெற்கில் 50 பேர் கைது

கொழும்பு, மே 10

தென் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் மீது 50 பேர் வரை கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ஆயிரத்துக்கு அதிகமான முறைப்பாடுகளும் பொலீஸாருக்குக் கிடைத்துள்ளன. [இ-எ]

# தென்மராட்சிப் பகுதியில் மூளைக்காய்ச்சல், மலேரியா

தென்மராட்சி மே 10

மலேரியாக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல் என்பவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை தென்மராட்சியில் நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

கடந்த மாதம் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 600 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் 103 பேர் மலேரியா காய்ச்சலினாலும், 19 பேர் மூளைக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டது சாவகச்சேரி வைத்தியசாலை ஆய்வுகூட அறிக்கை மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த ஒருவருட காலமாக மலேரியா நோய்த் தடுப்பு மருந்து தெளிக்கப்படாததாலேயே மலேரியாக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதாகக் கூறப்படுகிறது. [இ-117]

## 25 ஆயிரம் மீனவரை காணவில்லை

டாக்கா, மே 10

அண்மையில் பங்களாதேஷை தாக்கிய சூறாவளியில் சிக்கி சுமார் 25 ஆயிரம் மீனவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று அந்த நாட்டின் தகவல் அமைச்சர் தெரிவித்தார். [ஓ-எ]

## மட்டுநகரில் சிறுவன் குத்திக்கொலை

மட்டக்களப்பு நகருக்கு அருகே இருதயபுரம் பகுதியில் இனந்தெரியாத இலர் 14 வயது சிறுவன் ஒருவனைக் கத்தியால் குத்திக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அச்சம்பவத்தின் போது மேலும் மூன்று பேர் காயம் அடைந்தனர். [ஓ-ர]

## யாழ் இந்து..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைக்குத் தோற்றியிருக்க வேண்டிய — மாணவர்களுக்கு என நடத்தப்படும் விசேட தெரிவுப் பரீட்சை போன்று இந்த இரு பாடசாலை மாணவர்களுக்கும் பிரவேசப் பரீட்சை நடத்தப்படும்.

இந்தப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இந்த மாணவர்கள் உயர்வகுப்புக்கு அனுமதிக்கப்படுவர்.

பின்னர் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஜி. சீ. ஈ. [சாதாரண தர] பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து — இந்த இரு பாடசாலைகளிலும் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப— ஏனைய பாடசாலை மாணவர்களில் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ★ காங்கேயம் தொகுதியில் ஜெயலலிதாவுடன் மோத ராஜேந்தர் திடீர் தயக்கம்

சென்னை, மே 01

தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கேயம் தொகுதியில் அ.இ.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவை எதிர்த்தும் போட்டியிட வேட்பு மனுதாக்கல் செய்திருந்த நடிகர் டி. ஆர். ராஜேந்தர் பின்னர் தமது வேட்பு மனுவை வாபஸ் வாங்கிக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

செல்வி ஜெயலலிதா போட்டியிடும் இரண்டு சட்டசபைத் தொகுதிகளிலும் அவரை எதிர்த்துப் போட்டியிடப் போவதாக தாயகம் மறுமலர்ச்சிக் கழகத் தலைவரும் நடிகருமான ராஜேந்தர் முன்னர் அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. [ஓ-எ]

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 குழந்தைகள் உயிரிழப்பு! அறுவர் ஆஸ்பத்திரியில்!!

### நச்சு மீன்கறி ஏற்படுத்திய நாசம்

யாழ்ப்பாணம், மே 10

நச்சு மீனைக் கறி சமைத்து உண்டதாகக் கருதப்படும் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள் உயிரிழந்தனர்; அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு நேற்று நள்ளிரவு எடுத்துவரப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு குடத்தனை-மணற்காட்டுப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

மேரி சுஜாதா [வயது 7] என்ற பெண் குழந்தையும் அன்ரன் ரெயின் [வயது 5] என்ற ஆண் குழந்தையுமே உயிரிழந்தவர்களாவார்.

இவர்களின் பெற்றோரான எஸ். அல்பேன்ஸ் [வயது 35], மேரி விக்ரோறியா [வயது 26] ஆகியோரும் — மற்றைய குழந்தைகளான வின்சன்ட் பெனடிக்ட் [வயது 10] அல்போன்ஸ் வின்செண்ட் [வயது 9], ஜெராட் [வயது 11], மேரி சபிதா [வயது 1] ஆகியோரே ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளனர்.

## கப்டன் ரவி வீரமரணம்

கொக்குவில், மே 10

கடந்த செவ்வாயன்று வவுனியாவில் இடம்பெற்ற நேரடி மோதல் சம்பவத்தில் வீரமரணமடைந்த கப்டன் ரவியின் [பாலசிங்கம் ஜெயக்குமார்] புகழுடம்பு நேற்று மாலை அவரது ஊரான கொக்குவிலில் நேதாஜி சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெரும் எண்ணிக்கையான மக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து நேற்று மாலை புகழுடம்பு அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. [ஓ-69-5-15]

## காயம்

வவுனியா மாவட்டம் - ஓமந்தை அருகில் கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

## சிப்பாய் பலி

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

## கலந்துரையாடல்

யாழ் மறைவட்டப் பொது நிலையினர் கழகத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை கழக மண்டபத்தில் நடைபெறும்.

அப்போது, குரு முதல்வர் ஆயர் சிங்கராயர், குருத்துவக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது குறித்து பிரதானமாகக் கலந்துரையாடப்பட இருப்பதாக அறியவருகிறது. [அ]

## மீனவர் திரும்பவில்லை

கடந்த வாரம் நாகர்கோவில் கடற்பகுதியில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கரைதிரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நாகர் கோவிலைச் சேர்ந்த பி. தெய்வேந்திரராசா என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே அந்த மீனவர் ஆவார். [ஓ-144]

## உயர் வகுப்புத்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு வழமையான அனுமதிப் படிவம் மூலம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாடசாலை ரீதியாக பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவை வருமாறு:-

**மே 17**

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி ம. வி. மாணவருக்கு

**மே 8**

மகாஜனாக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

**மே 20**

யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம்.

**மே 21**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ். கனகரத்தினம் ம. ம. வி., தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**மே 23**

கொக்குவில் இந்துக் கல்லூரி.

**மே 24**

நெல்லியடி ம. ம. வி.

இவை தவிர்ந்த ஏனைய உயர்தர வகுப்புக்களையுடைய பாடசாலைகள் தத்தமது வசதிக்கு ஏற்ப இந்தப் பரீட்சையை நடத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே 29 ஆம் திகதி முதல் புதிய ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org